**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 320/2011**
**நாள்.08.11.2023**
**வா.சா.1- ராமசாமி**
**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

வழக்கு தாக்கல் செய்த பின்னர் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டார். சர்வே எண்.2259 அரசுக்கு சொந்தமான ஊரடி நிலம் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்யாமலா வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என சாட்சி எதிர் கேள்வி கேட்டார். அதற்கு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் அளிக்குமாறு சாட்சியிடம் நான் கூறியபோது நான் எனது ஊரில் மிகப்பெரியவர் என்று சாட்சி கூறி முறையாக பதில் அளிக்கவில்லை. எனவே, வழக்கை தொடர்ந்து நடத்த முடியாமல் நீதிமன்ற மாண்பை கெடுக்கும் வகையிலும் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கையை தொடர முடியாமல் தடை ஏற்படுத்தினார். எனவே நீதிமன்ற தலைமை எழுத்தர் இது சம்பந்தமாக வேடசந்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறு உத்தரவிடப்பட்டு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Digitally signed by R VANJI NATHAN

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வேடசந்தூர்